ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2098/27 - 2018 නොවැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2018.11.23
*2098/27 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்*

2 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.

இக்கட்டளை 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கின்ற 3 மாத காலப்பகுதியொன்றுக்கு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், விதிக்கப்பட்டு 2018.09.07 ஆந் திகதிய 2087/76 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட எச். எஸ். தலைப்பு இல. 0713.10.10 மற்றும் 0713.10.20 இன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பட்டாணிக் கடலைகள் (வட்டானா) சம்பந்தமாக வெளியிடப்பட்ட உத்தரவு 2018, நவெம்பர் மாதம் 24 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சர்.

நிதி மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சு,
கொழும்பு 01,
2018, நவெம்பர் 23.

**அட்டவணை**

| 1 ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 01 | 07.13 | 0713.10.10 | பட்டாணிக்கடலைகள் (பைசம் சற்றைவம்) - முழுமையானவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 5.00 |
| | | 0713.10.20 | பட்டாணிக்கடலைகள் (பைசம் சற்றைவம்) - பிளக்கப்பட்டவை | கி. கிராம் ஒன்றுக்கு ரூபா 8.00 |

12-164